| இராணிப்பேட்டை நகராட்சி | | |
|---|---|---|
| 2024ம் ஆண்டு மார்ச் 15 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி அளவில் நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள் | | |
| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண், மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
| 15.03.2024 | **பொருள் எண்.1**<br>இந்நகராட்சியின் குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ,2025ஆம் ஆண்டுக்கான பொதுநிதி 2024 போன்ற நிதிகளுக்கு உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு .வைக்கப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>ந.க.எண்.646/2024/பி1 | நகரமன்ற தீர்மானம் எண்,573<br>பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 15.03.2024 | **பொருள் எண்.2**<br>இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மயானகொள்ளை திருவிழா நடைபெற இருப்பதால் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் நாடாளுமன்ற பொது தேர்தல் விதிமுறைகள் வரஇருப்பதால் அவ்வப்பொழுது கைஇருப்பிற்கேற்ப கிருமி நாசினியான பிளீச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புதூள் ஆகியவைகளை தலா 3 டன் அளவில் கொள்முதல் செய்ய தோராயச் செலவினத் தொகைரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>01. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>02. அரசின் விலை விகிதத்திற்குட்பட்டு உள்ளூர் விநியோகஸ்தர்களிடமிருந்து விலைப்புள்ளியின் அடிப்படையில் நேரடியாக கொள்முதல் செய்யவும் அவசர அவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>03. இச்செலவினத்தை வருவாய்நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மைத் திட்டநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.0422 /2024/எச்1 | நகரமன்ற தீர்மானம் எண்,574<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 15.03.2024 | **<u>பொருள் எண். 3</u>**<br>இந்நகராட்சியில் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ள பொது கழிவறைகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தூய்மைப் பணிக்காக பெனாயில் மற்றும் ஆசிட் ஆகியவைகள் தேவைப்படுவதால் இதனை உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பெனாயில் 100 லிட்டர் மற்றும் ஆசிட் 100 லிட்டர் கொள்முதல் செய்ய தோராயச் செலவினத் தொகைரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு</u><br>01. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>02. நாடாளுமன்ற பொது தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுளுக்குவர இருப்பதால் பொதுமக்களின் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று அரசின் விலை விகிதத்திற்குட்பட்டு கொள்முதல் செய்யமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>03. இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.0422/2024/எச்1 | நகரமன்ற தீர்மானம் எண்,575<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 15.03.2024 | **<u>பொருள் எண். 4</u>**<br>இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசுபுழு ஒழிப்பு பணிக்கு பயன்பாட்டில் உள்ள தெமிபாஸ் மற்றும் பைரித்திரியம் மருந்துகள் தேவைப்படுவதால் இதனை தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தெமிபாஸ் 100 லிட்டர் (Temephos Emusifiable 50% EC) மற்றும் பைரித்திரியம் 100 லிட்டர் (Pyrethrum 2% Extract) ஆகியவைகளை கொள்முதல் செய்ய தோராயச் செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>01. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>02. நாடாளுமன்ற பொது தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வரஇருப்பதால் பொதுமக்களின் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் அவர்களிடம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் நேரடியாக கொள்முதல் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>03. இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.0422/2024/எச்1 | நகரமன்ற தீர்மானம் 576<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 15.03.2024 | **<u>பொருள் எண். 5</u>**<br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நலத் (கொடு.தடு 2) துறையின்அரசாணை நிலை எண். 105, நாள்.19.10.2020 இல் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தவர்களின் ஈமச்சடங்கிற்கு தொகைரூ. 5000/−ஐ வழங்க ஆணையிடப்பட்டதில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12036/2021/எச்1, நாள்.12.12.2022ல் இந்நகராட்சிக்கு தொகை ரூ.5.00 இலட்சம் விடுவிக்கப்பட்டதில் ஒரு பயனாளருக்கு ரூ.5000/−ம் வீதம் 100 பயனாளர்களுக்கு | நகரமன்ற தீர்மானம் எண்,577<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

வழங்கப்பட்டுள்ளது, தற்போது ஈமசடங்கு நிதியினை வழங்க வேண்டி பயனாளர்களிடமிருந்து 25 எண்ணிக்கையிலான மனுக்கள் பெறப்பட்டு போதிய நிதியின்றி நிலுவையில் உள்ளது. இந்நிலையில் இதற்க்கான தொகையை வழங்குமாறு பயனாளர்கள் தொடர்ந்து கோரி வருகின்றனர். எனவே, மேற்படி பயனாளர்களுக்கு ஈமசடங்கு நிதியினை வழங்க திட்டநிதியில் போதிய தொகை இல்லாததால் பொதுமக்களின் நலன்கருதி வருவாய் நிதியில் இருந்து பயனாளர்களுக்கு ஈமசடங்கு நிதியினை வழங்கவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி தொகையினை பெற்ற பின்பு வருவாய் நிதியில் ஈடு செய்து கொள்ள பயனாளர்களுக்கு ஈமசடங்கு நிதியினை தொடர்ந்து வழங்க வேண்டி தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

01. மன்றம் அனுமதி வழங்கலாம்.
02. மேற்படி செலவினத்தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1749/2020/எச்1

15.03.2024

**<u>பொருள் எண். 6</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 2024–2025 முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு கீழ்காணும் 10 இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி / பொதுஏலம் 16.02.2024 அன்று கோரப்பட்டது. மேற்படி, குத்தகை இனங்களுக்கு வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு.H.பைரோஸ்கான் என்பவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

அதனை தொடர்ந்து கீழ்கண்டள்ளவாறு ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி கேட்கப்பட்டுள்ளதையும் தற்போது ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டிற்கு 5% குத்தகை தொகை உயர்வு செய்யவும் மூன்றாம்மாண்டில் முந்தைய ஆண்டில் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **குத்தகைஇனம்** | **ஒப்பந்தபுள்ளி /பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர்கள்** | **கேட்கப்பட்ட ஏல கேள்வி தொகை** |
|---|---|---|---|
| 1 | பாலாற்றாங்கரையில் உள்ள நகராட்சிக்கு உரிமையுடைய திறந்தவெளி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விற்பனை செய்யும் உரிமம் | ஏலத்திற்கு எவரும் தொகை செலுத்தவில்லை | - |
| 2 | வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1) திரு.எம்.அப்ரோஸ்கான்,<br>2)திரு.டி.சோமசுந்தர், | 1)ரூ.21,56,000/–<br>2)ரூ.21,57,000/– |

நகரமன்ற தீர்மானம் எண்,578

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | 3) திரு.H.பைரோஸ்கான், (ஒப்பந்தப்புள்ளி) | **3)ரூ.21,70,000/-** |
| 3 | தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏலத்திற்கு எவரும் தொகை செலுத்தவில்லை | - |
| 4 | பேருந்து கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏலத்திற்கு எவரும் தொகை செலுத்தவில்லை | - |
| 5 | இ.ஐ.டி. பாரி கம்பெனி பிரதான சாலையினை ஒட்டி அமைந்துள்ள இடத்தில் நிற்கும் வாகனங்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1)திரு.V.கதிர்வேல்,<br>2)திரு.P.பழனி,<br>3)S.ஐயப்பன்,<br>4)திரு.J.P. சேகர்,<br>5)திரு.N.சசிகுமார், | 1)ரூ.10,63,000/–<br>2)ரூ.10,65,500/–<br>3)ரூ.10,65,000/–<br>**4)ரூ.10,66,000/–**<br>5)ரூ.10,62,000/– |
| 6 | ஆடு வதை கூடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1)திரு.V.கதிர்வேல்,<br>2)திரு.முகமது<br>3)திரு.M.சரவணன் | ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது |
| 7 | மாடு வதை கூடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1)திரு.முகமது ரகமத்துல்லா செரீப், | ஏலத்தில் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டார் |
| 8 | முத்துகடை கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1)திரு.D.ரேணுகோபால்,<br>2)திரு.P.பழனி, | **1)ரூ.3,23,000/–**<br>2)ரூ.3,22,000/– |
| 9 | வாரசந்தை கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏலத்திற்கு எவரும் தொகை செலுத்தவில்லை | – |
| 10 | மீன் விற்பனை அங்காடியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1)திரு.D.ரேணுகோபால்,<br>2)திரு,T.C.ஐயப்பன்,<br>. | 1)ரூ.8,47,000/–<br>**2)ரூ.8,50,000/–** |

<u>அலுவலக குறிப்பு :</u>

1. வரிசை எண்.2–ல் காணும் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.டி.சோமசுந்தர் என்பவர் ரூ.21,57,000/–க்கு உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ளார். திரு.H.பைரோஸ்கான் என்பவர்

| | | |
|---|---|---|
| | ரூ.21,70,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். ஏலக் கேள்வியை விட திரு.H.பைரோஸ்கான் என்பவர் ரூ.21,70,000/-ற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேற்படி, ஒப்பந்தப்புள்ளி தொகையானது 2023–2024 ஆம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.20,39,625/–னை விட ரூ.1,30,375/– அதிகமாக உள்ளதால் திரு.H.பைரோஸ்கான் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.21,70,000/-னை மன்றம் ஏற்கலாம்.<br>2. வரிசை எண்.5–ல் காணும் இ.ஐ.டி. பாரி கம்பெனி பிரதான சாலையினை ஒட்டி அமைந்துள்ள இடத்தில் நிற்கும் வாகனங்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.J.P.சேகர் என்பவர் ரூ.10,66,000/–ற்கு உயர்ந்த ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி, உயர்ந்தபட்ச தொகையானது 2023–2024 ஆம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.10,03,275/–னை விட ரூ.62,725/– அதிகமாக உள்ளதால் திரு.J.P.சேகர் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.10,66,000/–னை மன்றம் ஏற்கலாம்.<br>3. வரிசை எண்.8–ல் காணும் முத்துகடை கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.D.ரேணுகோபால், என்பவர் ரூ.3,23,000/–ற்கு உயர்ந்த ஏலக் கேள்வி கோரியுள்ளார். இத்தொகையானது அரசாங்க மதிப்பு ரூ.3,15,000/–யை விட ரூ.8000/– அதிகமாக உள்ளதால் திரு.D.ரேணுகோபால் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.3,23,000/–னை மன்றம் ஏற்கலாம்.<br>4. வரிசை எண்.10–ல் காணும் மீன் விற்பனை அங்காடியில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு,T.C.ஐயப்பன் என்பவர் **ரூ.8,50,000/–**ற்கு உயர்ந்த ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி, உயர்ந்தபட்ச தொகையானது 2023–2024 ஆம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.7,98,000/–னை விட ரூ.52,000/– அதிகமாக உள்ளதால் திரு,T.C.ஐயப்பன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை **ரூ.8,50,000/–**னை மன்றம் ஏற்கலாம்.<br>5. மேற்படி, வரிசை எண்.1,3,4,7 மற்றும் 9 ஆகிய குத்தகை இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்திற்கு எவரும் கலந்து கொள்ளததாலும் வரிசை எண். 6–ல் காணும் குத்தகை இனத்திற்கு ஏலம் ஒத்திவைக்கப்பட்டதாலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1888/2023/அ3) | |
| 15.03.2024 | **<u>பொருள் எண். 7</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 2024–2025 முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு கீழ்காணும் 6 இனங்களுக்கு மறுஒப்பந்தப்புள்ளி / பொதுஏலம் 28.02.2024 அன்று கோரப்பட்டது. மேற்படி, குத்தகை இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் எவரும் அளிக்கவில்லை. அதனை தொடர்ந்து கீழ்கண்டள்ளவாறு ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி கேட்கப்பட்டுள்ளதையும் தற்போது ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டிற்கு 5% குத்தகை தொகை உயர்வு செய்யவும் மூன்றாம்மாண்டில் முந்தைய ஆண்டில் குத்தகை தொகையில் 5% உயர்வு | நகரமன்ற தீர்மானம் எண்,579<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகைஇனம் | ஒப்பந்தபுள்ளி /பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர்கள் | கேட்கப்பட்ட ஏல கேள்வி தொகை |
|---|---|---|---|
| 1 | பாலாற்றாங்கரையில் உள்ள நகராட்சிக்கு உரிமையுடைய திறந்தவெளி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விற்பனை செய்யும் உரிமம் | ஏலத்திற்கு எவரும் தொகை செலுத்தவில்லை | |
| 2 | தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1)திரு.D.ரேணுகோபால்<br>2)திரு.M.அப்ரோஸ்கான் | ரூ.13,60,000/-<br>ரூ.13,59,000/- |
| 3 | பேருந்து கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏலத்திற்கு எவரும் தொகை செலுத்தவில்லை | |
| 4 | ஆடு வதை கூடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏலம் கோர எவரும் முன்வரவில்லை | |
| 5 | மாடு வதை கூடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1)திரு.முகமது ரகமத்துல்லா செரீப்,<br>2)திரு.C.ஐயப்பன் | ரூ.93,000/-<br>ரூ.92,000/- |
| 6 | வாரசந்தை கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1)திரு.க.சரத்குமார்<br>2)திரு.R.கதிர்வேலு | ரூ.70,000/-<br>ரூ.69,000/- |

**அலுவலக குறிப்பு :**

1. வரிசை எண்.2-ல் காணும் தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.D.ரேணுகோபால் என்பவர் ரூ.13,60,000/-க்கு உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ளார். மேற்படி, உயர்ந்தபட்ச தொகையானது 2023-2024 ஆம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.12,87,720/-னை விட ரூ.72,280/- அதிகமாக உள்ளதால் திரு.D.ரேணுகோபால் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.13,60,000/-னை மன்றம் ஏற்கலாம்.
2. வரிசை எண்.5-ல் காணும் மாடு வதை கூடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.முகமது ரகமத்துல்லா செரீப் என்பவர் ரூ. 93,000/-ற்கு உயர்ந்த ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி, உயர்ந்தபட்ச தொகையானது 2023-2024 ஆம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.82688/-னை விட ரூ.10,312/- அதிகமாக உள்ளதால் திரு.முகமது ரகமத்துல்லா செரீப் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.93,000/-னை மன்றம் ஏற்கலாம்.
3. வரிசை எண்.6-ல் காணும் வாரசந்தை கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.க.சரத்குமார் என்பவர் ரூ.70,000/-ற்கு உயர்ந்த ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி, உயர்ந்தபட்ச

<table>
<tr>
<td></td>
<td>தொகையானது 2023–2024 ஆம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.55,125/–னை விட ரூ.14,875/– அதிகமாக உள்ளதால் திரு.க.சரத்குமார் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.70,000/–னை மன்றம் ஏற்கலாம்.<br>4. மேற்படி, வரிசை எண்.1,3 மற்றும் 4 ஆகிய குத்தகை இனங்களுக்கு மறுஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்திற்கு எவரும் கலந்து கொள்ளததால் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோர நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1888/2023/அ3)</td>
<td></td>
</tr>
<tr>
<td>15.03.2024</td>
<td><u>பொருள் எண். 8</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 2024–2025 முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு 16.02.2024 அன்று நடைபெற உள்ள ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி / பொது ஏல அறிவிப்பு 300 எண்ணிக்கை அச்சடித்து வழங்கும் பணிக்கு கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>சரஸ்வதி DPH மற்றும் அப்செட் பிரிண்டர்ஸ், இராணிப்பேட்டை</td><td>ரூ.16,500/–</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ கிருஷ்ணா ஸ்கிரின் பிரிண்டர்ஸ், ஆற்காடு</td><td>ரூ.15,000/–</td></tr>
<tr><td>3</td><td>ஓம் சக்தி பிரஸ், இராணிப்பேட்டை</td><td>ரூ.17,400/–</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் கண்டுள்ள ஸ்ரீ கிருஷ்ணா ஸ்கிரின் பிரிண்டர்ஸ், ஆற்காடு என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>(ந.க.எண்.1888/2023/அ3)</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,580<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>15.03.2024</td>
<td><u>பொருள் எண். 9</u><br>. இந்நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள 68 கடைகளுக்கு 28.02.2024 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோரப்பட்டது. மேற்படி கடைகளுக்கு அன்றைய தினம் ஒப்பந்தப்புள்ளியில்</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,581<br>அலுவலகக்குறிப்பு</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் அன்றைய தினமே நடைபெற்ற பொது ஏலத்தில் கீழ்காணும் கடைகளுக்கு மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டு உயர்ந்த ஏலக் கேள்வி கேட்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | கடையின் விவரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் | கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|---|
| 1 | ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.1 | திரு.V.பாஸ்கரன்<br>திரு.P.ராம்மூர்த்தி | ரூ.4000/–<br>ரூ.3900/– |
| 2 | ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.2 | திரு.V.பாஸ்கரன்<br>திரு.P.ராமமூர்த்தி | ரூ.4000/–<br>ரூ.3900/– |
| 3 | ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.3 | திரு.A.யுவபாரத்<br>திரு.K.விவேக் | ரூ.3700/–<br>ரூ.3650/– |
| 4 | ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.5 | திரு.A.யுவபாரத்<br>திரு.K.விவேக் | ரூ.3700/–<br>ரூ.3650/– |
| 5 | ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.9 | திரு.S.மூர்த்தி<br>திரு.P.பாலசந்தர் | ரூ.4100/–<br>ரூ.4050/– |
| 6 | ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.10 | திரு.V.பாஸ்கரன்<br>திரு.P.ராமமூர்த்தி | ரூ.3900/–<br>ரூ.4000/– |
| 7 | முத்துக்கடை சந்திப்பு<br>கடை எண்.3 | செல்வி.M.புவனா<br>திரு.V.சதீஷ் சர்மா | ரூ.4200/–<br>ரூ.4150/– |
| 8 | எம்.பி.டி.ரோடு முதல் மாடி கடை எண்.8 | திரு.P.வேலவன்<br>திரு.S.குணசேகர், | ரூ.4000/–<br>ரூ.3900/– |
| 9 | எம்.பி.டி.ரோடு முதல் மாடி கடை எண்.9 | திரு.P.வேலவன்<br>திரு.S.குணசேகர் | ரூ.4000/–<br>ரூ.3900/– |
| 10 | எம்.பி.டி.ரோடு முதல் மாடி கடை எண்.10 | திரு.P.வேலவன்<br>திரு.S.குணசேகர், | ரூ.4100/–<br>ரூ.3950/– |
| 11 | வண்டிமேட்டு தெரு<br>கடை எண்.29A | திரு.V.தட்சணாமூர்த்தி,<br>திரு.S.வெங்கடேசன் | ரூ.10400/–<br>ரூ.10500/– |
| 12 | ஆர்.ஆர் ரோடு<br>கடை எண்.4 | திரு.R.சந்திரசேகரன்<br>திரு.D.திருவேங்கடம் | ரூ.5800/–<br>ரூ.5700/– |
| 13 | ஆர்.ஆர் ரோடு<br>கடை எண்.5 | திரு.R.சந்திரசேகரன்<br>திரு.D.திருவேங்கடம் | ரூ.5800/–<br>ரூ.5700/– |
| 14 | SMH அருகில் உள்ள<br>கடை எண்.2 | திருமதி.K.ரோஸ்மேரி<br>திரு.K.பீட்டர் | ரூ.2400/–<br>ரூ.2500/– |

**அலுவலக குறிப்பு :–**

| | | |
|---|---|---|
| | 1. வரிசை எண்.1–ல் காணும் ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.1–ற்கு திரு.V.பாஸ்கரன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.4000/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வரிசை எண்.2–ல் ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.2–ற்கு திரு.V.பாஸ்கரன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.4000/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. வரிசை எண்.3–ல் ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.3–ற்கு திரு.A.யுவபாரத் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.3700/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>4. வரிசை எண்.4–ல் ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.5–ற்கு திரு.A.யுவபாரத் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.3700/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>5. வரிசை எண்.5–ல் ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.9–ற்கு திரு.S.மூர்த்தி என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.4100/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>6. வரிசை எண்.6–ல் ஆடு தொட்டி வணிக வளாக கடை எண்.10–ற்கு திரு.P.ராமமூர்த்தி என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.4000/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>7. வரிசை எண்.7–ல் முத்துகடை சந்திப்பு கடை எண்.3–ற்கு செல்வி.M.புவனா என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.4200/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>8. வரிசை எண்.8–ல் எம்.பி.டி.ரோடு முதல் மாடி கடை எண்.8–ற்கு திரு.P.வேலவன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.4000/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>9. வரிசை எண்.9–ல் எம்.பி.டி.ரோடு முதல் மாடி கடை எண்.9–ற்கு திரு.P.வேலவன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.4000/–னை னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>10. வரிசை எண்.10–ல் எம்.பி.டி.ரோடு முதல் மாடி கடை எண்.10–ற்கு திரு.P.வேலவன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.4100/–னை னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>11. வரிசை எண்.11–ல் வண்டிமேட்டு தெரு கடை எண்.29A–ற்கு திரு.S.வெங்கடேசன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.10,500/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>12. வரிசை எண்.12–ல் ஆர்.ஆர். ரோடு கடை எண்.4–ற்கு திரு.R.சந்திரசேகரன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.5800/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>13. வரிசை எண்.13–ல் ஆர்.ஆர். ரோடு கடை எண்.5–ற்கு திரு.R.சந்திரசேகரன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.5800/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>14. வரிசை எண்.14–ல் SMH அருகில் உள்ள கடை எண்.2–ற்கு திரு.K.பீட்டர் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை ரூ.2500/–னை மன்றம் அனுமதிக்கலாம்.<br>15. காலியாக உள்ள 66 கடைகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3949/2018/அ3) | |

| | | |
|---|---|---|
| 15.03.2024 | **<u>பொருள் எண். 10</u>**<br>இந்நகராட்சியில் ஈப்பு ஓட்டுநகராக பணிபுரியும் திரு.சா.மோகன்ராமன், என்பவர் புதியதாக இருசக்கர வாகனம் வாங்குவதற்கு செல்வம் மோட்டார்ஸ், வேலூர் என்ற நிறுவனத்தில் Honda Shine 100 CC என்ற வாகனத்திற்கு இரு சக்கர வாகன முன்பணம் வழங்க கோரி ரூ.90,630/-ற்கு விலைப்புள்ளி பெற்று விண்ணப்பம் அளித்துள்ளார். அரசாணை நிலை எண்.27 நிதி (ஊதியம்) துறை, நாள்.20.01.2021-ல் இருசக்கர வாகனங்களுக்கு ரூ.1,00,000/- வரை வாகன முன்பணம் வட்டியுடன் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, திரு.சா.மோகன்ராமன், என்பவருக்கு இருசக்கர வாகன முன்பணமாக ரூ.90,630/-னை வழங்கவும் மேற்படி தொகையினை வட்டியுடன் சேர்த்து தவணை முறையில் ஊதியத்தில் பிடித்தம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>**ந).க.எண்.307/2024/அ3)** | நகரமன்ற தீர்மானம் எண்,582<br>அலுவலக க்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 15.03.2024 | **<u>பொருள் எண். 11</u>**.<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பி.எம்.டி. மெமோரியல் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு கடந்த 2017-18-ம் ஆண்டு முதல் 2020-2021 வரை ரூ.546952/- சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பி.எம்.டி மெமோரியல் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை அவர்களின் 12.07.2023-ந் தேதிய கடிதத்தில் பி.எம்.டி மெமோரியல் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் 1958-ம் ஆண்டு முதல் அரசு நிதி உதவி பெறும் பயிற்சி நிறுவனமாக செயல்பட்டுவருவதால் 2017-2018 முதல் 2020-2021 வரை விதிக்கப்பட்டுள்ள சொத்துவரி தொகை ரூ. 546952/-யை இரத்து செய்யக் கோரியும், செப்டம்பர் 2021-ல் மேற்படி பயிற்சி நிறுவனம் மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் இவ்வலுவலக கடித ந.க.எண்.1276/2023/அ1, நாள்.25.08.2023 மற்றும் 09.10.2023-ல் மேற்படி, கல்வி நிறுவனம் முறையே அரசு நிதியுதவி பெறும் நிறுவனம் என்பதற்கான சான்றும் மற்றும் ஆசிரியர் பயிற்சி படிப்பு சுயநிதி கல்வியா (Self Financing Course) அல்லது சுயநிதி அல்லாத கல்வியா (Non-Self Financing Course) என்பதற்கான விளக்கம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதின் பேரில், முதல்வர் (பொ), மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் இராணிப்பேட்டை அவர்களின் ந.க.எண்.348/அ1/2023, நாள். 28.08.2023 மற்றும் 17.10.2023-ந் தேதிய கடிதங்களில் முறையே மேற்படி பி.எம்.டி மெமோரியல் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் 2017-2018 முதல் 2020-2021 வரை அரசால் அங்கீகரிக்கப்பட்ட உதவி பெறும் நிறுவனமாக செயல்பட்டது என்றும் மேற்படி ஆசிரியர் பயிற்சி படிப்பு சுய நிதி அல்லாத கல்வி (அரசு உதவி பெறும் நிறுவனம்) என்றும் தற்போது, மேற்படி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மூடப்பட்டுள்ளது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட நிலையில், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன் பிரிவு 83(C)-ன் படியும் மேலும், தற்போது செயல்பாட்டில் உள்ள தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998-ன் பிரிவு 87(c)-ன் | நகரமன்ற தீர்மானம் எண்,583<br>அலுவலக க்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | படியும் அரசு கல்வி நிறுவனங்கள், அரசு நிதியுதவியுடன் இயங்கும் கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி விதிக்கப்பட்டதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள கல்வி நிறுவனம் 2017-18 முதல் 2020-21 வரை செலுத்த வேண்டிய சொத்துவரி நிலுவை தொகை ரூ. 546952/-யை (ஐந்து இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து தொலாயிரத்து ஐம்பத்தி இரண்டு மட்டும்) ரத்து செய்ய வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன் பிரிவு 83(C)-ன் படியும் மேலும், தற்போது செயல்பாட்டில் உள்ள தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998-ன் பிரிவு 87(c)-ன் படியும், பி.எம்.டி. மெமோரியல் பெண்கள் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு 2017-18 முதல் 2020-2021 வரை செலுத்த வேண்டிய சொத்துவரி ரூ.546952/-யை கேட்பு பட்டியலிருந்து நீக்கம் செய்ய வேண்டி மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி கட்டிடத்திற்கு 2021-2022 முதல் சொத்துவரி வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண்**.1276/2023/**அ**1) | |
| 15.03.2024 | **<u>பொருள் எண். 12</u>**<br>Joint Secretary And Mission Director,DAY-NULM &PM SVANidhi, அவர்களின் கடித எண். D.O.No.K-12012/4/2020-PM SVANidhi, நாள்.22.08.2023-ல், இராணிப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருவோர வியாபாரிகள் PM SVANidhi திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று பயனடைந்த பயனாளிகளின் விவரம் மற்றும் அவரது குடும்பத்தை சார்ந்த நபர்களின் விவரத்தினை சேகரித்து "SVANidhi Se Samriddhi"என்ற திட்டத்தின் கீழ் 1. பிரதம மந்திரியின் சுரக்ஷா பீமா யோஜனா, 2. பிரதம மந்திரியின் ஜீவன் ஜோதி பீமா யோஜனா, 3. பிரதம மந்திரியின் ஜன் தன் யோஜனா, 4. பிரதம மந்திரியின் ஷ்ரம் யோகி மந்தன் யோஜனா, 5. பிரதம மந்திரியின் மாத்ரு வந்தனா யோஜனா, 6. ஜனனி சுரக்ஷா யோஜனா, 7.BoCW இன் கீழ் பதிவு, 8. ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு போன்ற திட்டங்களில் பயனாளிகள் பயன் பெறும் விதமாக இராணிப்பேட்டை நகராட்சியில் உள்ள தெருவோர வியாபாரிகள் மற்றும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் விவரத்தினை சேகரித்து PM SVANidhi Beneficiaries Socio-Economic Profiling application என்ற மென்பொருளில் பதிவேற்றம் செய்ய இந்நகராட்சி தேர்வு செய்யப்பட்டு Phase -5ல், மொத்தமாக 506 பயனாளிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் முதல் கட்டமாக இந்தியன் வங்கியில் கணக்கு ஒன்று துவங்கப்பட்டு அதில் இத்திட்டத்திற்கு என ரூபாய். 5 லட்சம் வரப்பட்டுள்ளது. எனவே மேற்படி தெருவோர வியாபாரிகளின் விவரம் மற்றும் அவரது குடும்பத்தை சார்ந்த நபர்களின் விவரங்களை சேகரிக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1718/2022/எப்1. | நகரமன்ற தீர்மானம் எண்,584<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 15.03.2024 | **<u>பொருள் எண். 13</u>** | நகரமன்ற தீர்மானம் |

| | | |
|---|---|---|
| | மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் கடித ந.க.சி1/9051/2023, நாள்29.02.2024–ல் இராணிப்பேட்டை நகராட்சி எல்லைகுட்பட்ட வார்டு– B, பிளாக்–25, நகரபுல எண்.1–ல் 2365 சதுர மீட்டர் பரப்பில் சர்க்கார் புறம்போக்கு – ஆசிரியர் பயிற்சி பள்ளி என்ற வகைப்பாடு கொண்ட, வார்டு– B, பிளாக்–25, நகரபுல எண்.2–ல் 1650 சதுர மீட்டர் பரப்பில் சர்க்கார் புறம்போக்கு– பொதுப்பணித்துறை கோர்ட் என்ற வகைப்பாடு கொண்ட, வார்டு– B, பிளாக்–25, நகரபுல எண்.3–ல் 2087 சதுர மீட்டர் பரப்பில் சர்க்கார் புறம்போக்கு– துணை கண்காணிப்பாளர் அலுவலகம் என்ற வகைப்பாடு கொண்ட, வார்டு– B, பிளாக்–25, நகரபுல எண்.4–ல் 6205 சதுர மீட்டர் பரப்பில் சர்க்கார் புறம்போக்கு– டிஸ்ட்ரிக் முனிசிபல் கோர்ட் என்ற வகைப்பாடு கொண்ட, வார்டு– B, பிளாக்–25, நகரபுல எண்.5–ல் 5909 சதுர மீட்டர் பரப்பில் சர்க்கார் புறம்போக்கு– அரசினர் ஆசிரியர் பயிற்சி பள்ளி என்ற வகைப்பாடு கொண்ட, ஆக மொத்தம் 18216 சதுர மீட்டர் (4.50 ஏக்கர்) நிலத்தில் மாவட்ட நீதிமன்றம் மற்றும் குடியிருப்பு அமைக்க நீதித்துறைக்கு நில மாற்றம் செய்ய உள்ளதாகவும்,<br>மேற்படி நில மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி பெற்று வழங்குமாறு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி இடங்கள் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் இல்லை என்பதால் நில மாற்றம் செய்வது தொடர்பாக நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களுக்கு தெரிவிக்கலாம்.<br>**<u>ந.க.எண்.1199/2023/எப்1.</u>** | எண்,585<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 15.03.2024 | **<u>பொருள் எண். 14</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சியில் பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.2360/2023/இ1 நாள் 12.01.2024ன் படி மின்னனு (E–Tender Online /Offline) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 30.01.2024 அன்று பெறப்பட்ட தேர்வான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு. | நகரமன்ற தீர்மானம் எண்,586<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம் |
|---|---|---|---|---|
| 1 | MBT சாலையில் உள்ள நகராட்சி வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடைகளை சுற்றி சுற்று சுவர் அமைத்திடும் பணி | 3.70 | பி.பழனி,<br>நெ.302/2, தண்டலம் ரோடு,<br>வள்ளலார் நகர்,இராணிப்பேட்டை.. | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |
| | | | ந.அ.சுஜாதா,<br>எண்.6/3பி, பாரதிதாசன் சாலை<br>இராணிபெல்நகர்,<br>சிப்காட், இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட 0.47 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | MBT சாலையில் உள்ள நகராட்சி வணிக வளாக கடைகள் அமைந்துள்ள இடத்தில் பொது கழிப்பறை அமைத்திடும் பணி | 9.50 | பி.பழனி,<br>நெ.302/2, தண்டலம் ரோடு,<br>வள்ளலார் நகர்,இராணிப்பேட்டை.. | மதிப்பீட்டை விட<br>0.06 % குறைவு |
| | | | ந.அ.சுஜாதா,<br>எண்.6/3பி, பாரதிதாசன் சாலை<br>இராணிபெல்நகர்,சிப்காட்,<br>இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட<br>0.31 % அதிகம் |
| 3 | வார்டு எண்.25 பாலார்நகர் முதல் தெரு மற்றும் குறுக்கு தெரு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 8.30 | செல்வராணி,<br>3/976,திருவள்ளுவர் நகர்,புளியங்கண்ணு,<br>இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட<br>0.06 % குறைவு |
| | | | பி.சிவசங்கர்,<br>45,ஒத்தவாடைத்தெரு,<br>நவல்பூர், இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட<br>0.31 % அதிகம் |
| 4 | வார்டு எண்.28 படவேட்டம்மன் கோயில் தெரு மற்றும் ரொட்டிக்கார தெருவில் உள்ள பழுதடைந்த சிறுபாலங்களை அகற்றி உயர்த்தி புதிய சிறுபாலங்கள் அமைத்தல் | 1.70 | பி.பழனி,<br>நெ.302/2, தண்டலம் ரோடு,<br>வள்ளலார் நகர், இராணிப்பேட்டை.. | மதிப்பீட்டை விட<br>0.07 % குறைவு |
| | | | ந.அ.சுஜாதா,<br>எண்.6/3பி, பாரதிதாசன் சாலை<br>இராணிபெல்நகர்,<br>சிப்காட், இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட<br>0.26 % அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) மேற்காணும் பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்.
2) மேற்படி பணிகளுக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கவும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 2360/2023/இ1)

| | | |
|---|---|---|
| 15.03.2024 | **<u>பொருள் எண். 15</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சியில் பொதுநிதி மற்றும் கல்விநிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1624/2023/இ1 நாள் 10.01.2024ன் படி மின்னனு (E–Tender Online /Offline) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 31.01.2024 அன்று பெறப்பட்டு | நகரமன்ற தீர்மானம் எண்,587<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

தேர்வான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.28 ராஜாஜி தெரு பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சிறுபாலம் அமைத்திடும் பணி | 0.725 | பி.பழனி,<br>நெ.302/2, தண்டலம் ரோடு,<br>வள்ளலார் நகர்,<br>இராணிப்பேட்டை.. | மதிப்பீட்டை விட 0.05 % குறைவு |
| | | | ந.அ.சுஜாதா,<br>எண்.6/3பி, பாரதிதாசன் சாலை இராணிபெல்நகர்,<br>சிப்காட், இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட 0.27 % அதிகம் |
| 2 | பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகவளாகத்தில்கெல்லீஸ் சாலையில்கழிவு நீர் செல்ல வடிகால் வசதி அமைத்தல். | 1.80 | தணிகைவேல்,<br>நெ.50,பிள்ளையார் கோவில் தெரு, காட்டுப்பாக்கம்,<br>நெமிலிவட்டம் | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |
| | | | RJS Construction,<br>LR நிலையம்,<br>45, ஒத்தவாடைத்தெரு,<br>நவல்பூர், இராணிப்பேட்டை.. | மதிப்பீட்டை விட 0.40 % அதிகம் |
| 3 | வார்டு எண்.11 பிஞ்சி சமுதாய கழிப்பறையில் கழிவுநீர் நச்சுதொட்டி அமைத்தல். | 1.50 | டி.சி.ஐயப்பன்,<br>நெ.3/38,எஸ்.அக்ராஹாரம்,<br>குடிகுண்டா, திருத்தணி தாலுக்கா, | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |
| | | | எம்.புருஷோத்தமன்,<br>நெ.5/65,கம்மா பாளையம்,<br>சோளிங்கர் தாலுக்கா. | மதிப்பீட்டை விட 0.42 % அதிகம் |
| 4 | MBT சாலையில் பழுதடைந்துள்ள கால்வாய் பகுதிகளில் 450mm விட்டமுள்ள | 1.70 | பி.பழனி,<br>நெ.302/2, தண்டலம் ரோடு,<br>வள்ளலார் நகர்,<br>இராணிப்பேட்டை.. | மதிப்பீட்டை விட 0.10 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | RCCகுழாய் அமைத்தல் | | ந.அ.சுஜாதா,<br>எண்.6/3பி, பாரதிதாசன் சாலை இராணிபெல்நகர், சிப்காட், இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட 0.41 % அதிகம் |
| 5 | ஆதிதிராவிடர் நலபள்ளி வளாகத்தில் புதியதாக 5 எண்ணம் கழிவறையும், 5 எண்ணம் குளியலறையும் அமைத்தல். | 16.00 | டி.சி.ஐயப்பன்,<br>நெ.3/38,எஸ்.அக்ராஹாரம், குடிகுண்டா, திருத்தணி தாலுக்கா, | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |
| | | | எம்.புருஷோத்தமன்,<br>நெ.5/65,கம்மா பாளையம், சோளிங்கர் தாலுக்கா. | மதிப்பீட்டை விட 0.28 % அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) மேற்காணும் பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்.
2) மேற்படி பணிகளுக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கவும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் . 1624/2023/இ1)

---

15.03.2024

**<u>பொருள் எண். 16</u>**

இராணிப்பேட்டை நகராட்சியில் பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1046/2023/இ1 நாள் 12.01.2024ன் படி மின்னனு (E–Tender Online /Offline) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு02.02.2024 அன்று பெறப்பட்ட தேர்வான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் உள்ள சிறுமின்விசை பம்புகளில் உள்ள பழுதுகளை சரிசெய்யும் பொருட்டு 1.00HP திறனுள்ள 5 மின்மோட்டார்கள் மற்றும் ஸ்டார்டர்கள் வாங்கி பயன்படுத்தும் | 2.25 | தணிகைவேல்,<br>நெ.50,பிள்ளையார் கோவில் தெரு, காட்டுப்பாக்கம், நெமிலிவட்டம் | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |
| | | | RJS Construction,<br>LR நிலையம்,<br>45, ஒத்தவாடைத்தெரு, | மதிப்பீட்டை விட 0.36 % அதிகம் |

நகரமன்ற தீர்மானம் எண்,588
அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| | பணி | | நவல்பூர், இராணிப்பேட்டை.. | |
| 2 | வார்டு எண்.5 அம்பேத்கர் தெரு பகுதியில் உள்ள கழிப்பிடத்திற்கு ஏற்கனவே உள்ள ஆழ்துளைகிணறு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல் | 1.50 | தணிகைவேல், நெ.50,பிள்ளையார் கோவில் தெரு, காட்டுப்பாக்கம், நெமிலிவட்டம் | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |
| | | | பி.பழனி, நெ.302/2, தண்டலம் ரோடு, வள்ளலார் நகர், இராணிப்பேட்டை.. | மதிப்பீட்டை விட 0.40 % அதிகம் |
| 3 | வார்டு எண்.24 புலித்தெரு குறுக்கு சந்தில் ஆழ்துளை குழாய் கிணறுடன் மின்விசை பம்ப் அமைத்தல். | 2.10 | கே.சண்முகபிரியன், 42/50,தேவிநகர், 3வதுகுறுக்குதெரு, ஆற்காடு | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |
| | | | எஸ்.எழில்வாணன், 9,பஜார்வீதி, லாலாப்பேட்டை, இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட 0.39 % அதிகம் |
| 4 | தலைமை நீரேற்றுநிலையத்தில் உள்ள60HP,50HP,20Hp,15Hp &10Hp மோட்டார்கள் மற்றும் ஸ்டார்டர்கள் 2023-24ம் ஆண்டு பராமரிப்பு பணி | 9.50 | கே.சண்முகபிரியன், 42/50,தேவிநகர், 3வதுகுறுக்குதெரு, ஆற்காடு | மதிப்பீட்டை விட 0.09 % குறைவு |
| | | | எஸ்.எழில்வாணன், 9,பஜார்வீதி, லாலாப்பேட்டை, இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட 0.40 % அதிகம் |

**அலுவலககுறிப்பு**

1) மேற்காணும் பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்.
